தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகத்தில் 9 இடங்களில் 100 டிகிரி வெயில்

**சென்னை,**

சென்னை உள்பட தமிழகத்தின் 9 இடங்களில் செவ்வாய்க்கிழமை (ஏப்.1) 100 டிகிரிக்கும் அதிகமான வெயில் பதிவானது. மாநிலத்திலேயே அதிகபட்சமாக வேலூரில் 105 டிகிரி வெயில் சுட்டெரித்தது.

கோடைக்காலம் தொடங்கியதையடுத்து தமிழகம் முழுவதும் அனல் காற்றுடன் கூடிய வெயில் வாட்டி வருகிறது. இந்நிலையில் வரும் நாள்களில் கோடை யின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் எ வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உள்மாவட்டங்களில் மழை வாய்ப்பு: ஒடிஸாவிலிருந்து தென் தமிழகம் வரை வளிமண்டல மேலடுக்கில் ஏற்பட்ட சுழற்சி காரணமாக அடுத்த இரு நாள்களுக்கு தமிழகத்தின் உள்மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை பதிவான வெயிலின் அளவு (டிகிரி ஃபாரன்ஹீட்டில்):

வேலூர் - 105, திருச்சி, கரூர் பரமத்தி, திருப்பத்தூர் (வேலூர்) - 104, மதுரை, சேலம் - 103, தருமபுரி, பாளையங்கோட்டை - 102, சென்னை - 101, கொடைக்கானல் - 73

## கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையில் மாற்றமில்லை

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக்கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 68 ஆக இருந்தது. விற்பனையில்

மாற்றம் எதுவும் இல்லாததால் செவ்வாய்க்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

**தனியார் விதை உற்பத்தி நிலையங்களில் அதிகாரிகள் ஆய்வு**

**தாராபுரம்,**

தாராபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள தனியார் விதை உற்பத்தி நிலையங்கள் மற்றும் சுத்திகரிப்பு ஆலைகளில் அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

ஈரோடு விதைச்சான்று உதவி இயக்குநர் வி.சி.மகாதேவன் தலைமையிலான குழுவினர் இச்சோதனையில் ஈடுபட்டனர். சோதனையின் போது வயல் மட்ட விதை பதிவேடு, விதை சுத்தி அறிக்கை, சுத்தி செய்த விதை குவியல்களின் தரங்களை, மிதவை சோதனையின் மூலம் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். மேலும், விதை உற்பத்தியில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்து உற்பத்தியை பெருக்க உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி வழங்குமாறு அதிகாரிகளுக்கு உதவி இயக்குநர் அறிவுரை வழங்கினார்.

மேலும், தரமற்ற விதை உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விதை உற்பத்தியாளர்களுக்கு உதவி இயக்குநர் எச்சரிக்கை விடுத்தார்.

**சேவூரில் ரூ. 6.30 லட்சம் நிலக்கடலை ஏலம்**

**அவிநாசி,**

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில், ரூ. 6.30 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு, 550 நிலக்கடலை மூட்டைகள் வந்திருந்தன. சென்ற வாரத்தை விட 150 மூட்டைகள் அதிகமாக வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக (காய்ந்த) நிலக்கடலை ரூ. 3,480 முதல் ரூ. 3,660 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 3,210 முதல் ரூ. 3,370 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 6.30 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 6 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில்

இருந்து 60 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர். சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் அழகிரி சாந்தலிங்கம் (பொறுப்பு) கூறுகையில், பச்சை நிலக்கடலை வரத்து இல்லை. சென்ற வாரத்தை விட 150 மூட்டைகள் வரத்து அதிகரித்ததுடன், சென்ற வாரத்தை விட குவிண்டாலுக்கு ரூ. 165 வரை விலையும் அதிகரித்திருந்தது என்றார்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 52.60 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 52.60 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 287 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 5.1 டி.எம்.சி.

### மீன்பிடித் தடைக் காலம் தொடங்குவதால் முட்டை விலை குறைய வாய்ப்பில்லை

**நாமக்கல்,**

கிழக்குக் கடற்கரைப் பகுதியில் வருகிற 15-ஆம் தேதி முதல் மீன்பிடி தடைக் காலம் தொடங்க உள்ளதால், ரூ.2.40-க்கு கீழ் முட்டை கொள்முதல் விலை குறைய வாய்ப்பில்லை.

எனவே, விலை சரிவு குறித்து பண்ணையாளர்கள் அச்சமடையத் தேவையில்லை என்று, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்தது.

சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய நாமக்கல் மண்டலத்தில் கடந்த மார்ச் 1-ஆம் தேதி ரூ.3.45-ஆக இருந்த முட்டைக் கொள்முதல் விலை படிப்படியாக சரிந்து ஒரே மாதத்தில் ரூ.2.40-ஆக குறைந்துள்ளது.

இதுகுறித்து தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டலத் தலைவர் பொ.செல்வராஜ் வெளியிட்ட அறிக்கை:

ஆண்டுதோறும் ஏப்ரல் 15 முதல் மே 30-ஆம் தேதி வரை கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடிக்க தடைக் காலம் அமல்படுத்தப்படும் என்பதால், இந்த

காலகட்டத்தில் மீன் விலை கணிசமாக உயரும். இதனால், முட்டை நுகர்வு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதுபோன்ற காரணங்களால் முட்டைக் கொள்முதல் விலை ரூ2.40-க்கும் கீழ் குறைய வாய்ப்பில்லை.

மேலும், ஏப்ரல் 13-ஆம் தேதியுடன் பங்குனி உத்திரம் முடிந்து தமிழகத்தில் முட்டை விற்பனை அதிகரிக்கக் கூடும். உகாதிப் பண்டிகை முடிந்ததால் முட்டைக் கோழிகள் பெருமளவில் விற்பனைக்காக கேரளம், கர்நாடக மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருவதால், முட்டை உற்பத்தி மேலும் குறைந்து வருகிறது.

இதனால், முட்டைகளுக்கு அதிகரிக்க உள்ள தேவைகள் அதன் விலையை உயர்த்த வாய்ப்புள்ளது. எனவே, பண்ணையாளர்கள் சந்தை நிலையை உணராமல் அவசரப்பட்டு முட்டைகளைக் குறைத்து விற்காமல் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு அறிவிக்கும் விலைக்கே விற்க வேண்டும் என்றார் அவர்.

## "பகல், இரவில் வெப்பம் அதிகரிக்கும்'

**நாமக்கல்,**

தற்போது நிலவும் வானிலை அடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் பகல், இரவில் வெப்ப அளவுகள் மேலும் அதிகரிக்கும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துளளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (ஏப்.2 முதல் 4-ம் தேதி வரை) வானம் தெளிவானதாகவும், மழையின்றியும் காணப்படும். காற்றின் திசை வேகம் மணிக்கு 5 முதல் 7 கிமீ. வேகத்தில் தெற்கு, தென்கிழக்கிலிருந்து வீசக்கூடும். வெப்ப நிலை குறைந்தபட்சம் 73.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 104 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 15 சதம் முதல் அதிகபட்சம் 62 சதம் வரை இருக்கும்.

**கோழிப் பண்ணையாளர்களுக்கு**: அதிக வெப்பத்தால், கோழிகளிடையே வெப்ப அயற்சி, வெப்ப அதிர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. தவிர, இரவு வெப்பமும் 75.2 டிகிரி பாரன்ஹீட் அளவிலேயே இருப்பதால், முட்டை உற்பத்தியைத் தக்க வைத்துக் கொள்ள தீவனத்தில் அமினோ அமிலங்கள் சேர்க்கவும், எரிசக்தியின்

அளவைக் குறைத்து தண்ணீரிலும் தீவனத்திலும் வைட்டமின் சி சேர்த்து வர வேண்டும். காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தீவனத்தை கிளராமல் குளிர்ந்த நீர் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**விவசாயிகளுக்கு**: குட்டி ஈன்ற ஆடுகளில் சில ஆடுகளில் நஞ்சுக்கொடியுடன் கருப்பையும் சேர்ந்து வெளித் தள்ளப்பட்டு விடும். அவ்வாறு வெளித் தள்ளப்பட்ட கருப்பைத் திசுக்கள் மண், தூசியால் அசுத்தப்படவும் தற்போதைய உயர் வெப்ப நிலையால், விரைவில் உலர்ந்து விடவும் வாய்ப்புள்ளது.

எனவே, வெளியே தள்ளப்பட்ட கருப்பைத் திசுக்களைச் சுத்தமான ஈரத் துணியால் சுற்றி வைத்து உடனடியாக மருத்துவச் சிகிச்சை அளிப்பது அவசியம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராசிபுரத்தில் ரூ.70 லட்சம் பருத்தி ஏலம்

**ராசிபுரம்,**

ராசிபுரம் வேளாண்மை விற்பனையாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ.70 லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது. ராசிபுரம் வேளாண்மை விற்பனையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் சார்பில், ராசிபுரம் அருகேயுள்ள கவுண்டம்பாளையம் விற்பனை மையத்தில் திங்கள்கிழமை பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்றனர்.

சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம், வடுகம், நாமகிரிப்பேட்டை, மங்களபுரம், திம்மநாய்க்கன்பட்டி, தொப்பப்பட்டி, அத்திபலகானூர், கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி, கோரைக்காடு, ஆத்தூர், வீரகனூர், திருச்சி, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிளிலிருந்து விவசாயிகள் பங்கேற்றனர். இதில், டிசிஎச் ரகம் ரூ. 5,699 முதல் ரூ.6,789 வரையிலும், ஆர்சிஎச்., ரகம் ரூ.4,609 முதல் ரூ.5,209-க்கும் ஏலம் போனது.

## மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு

**மேட்டூர்,**

மேட்டூர் அணையிலிருந்து குடிநீருக்கு திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு செவ்வாய்க்கிழமை நொடிக்கு 3 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கடந்த இரு தினங்களுக்கு முன்பு அணையில் இருந்து நொடிக்கு இரண்டாயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை காலை நீர் திறப்பு நொடிக்கு 3 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது. செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 48.24 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 1,028 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 16.72 டி.எம்.சி.யாக இருந்தது.

**நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தூர்வாரும் பணி தொடக்கம்**

**களியக்காவிளை,**

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்துக்கு உள்பட்ட பகுதி விவசாயத்துக்கு பயன்பட்டு வந்த நெய்யாறு இடதுகரைக் கால்வாயில், கேரள அரசு தண்ணீர் திறந்துவிடுவதை நிறுத்தி 10 ஆண்டுகள் கடந்த நிலையில், தற்போது தூர்வாரும் பணி தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது இக்கால்வாயில் மீண்டும் தண்ணீர் வரும் என்ற எதிர்பார்ப்பை இப்பகுதி விவசாயிகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

விளவங்கோடு பகுதி விவசாய பாசனத்துக்காக நெய்யாறு அணையிலிருந்து 1963ஆம் ஆண்டுமுதல் 2004ஆம் ஆண்டு வரை நெய்யாறு இடதுகரைக் கால்வாய் மூலம் கேரள அரசால் தண்ணீர் திறந்துவிடப்பட்டு வந்தது. இதன்மூலம் 22 கி.மீட்டர் நீளமுடைய நெய்யாறு இடதுகரை பிரதான கால்வாய் மூலம் 2,347 சதுர மைல் பரப்பு பகுதியும், 12.4 கிலோ மீட்டர் நீளம் கொண்ட முல்லையாறு கிளைக் கால்வாய் மூலம் 2,264 ஏக்கர் விவசாய நிலங்களும் பயன்பெற்று வந்தன.

2004 ஜனவரி மாதம் இக் கால்வாயில் தண்ணீர் விடுவதை கேரள அரசு நிறுத்திய பின்னர், அதே ஆண்டு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னர் 10 ஆண்டுகளாக இக் கால்வாய் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பிரதான கால்வாயில் மண் நிரம்பியதுடன், கரைகள் புல், செடிகள் வளர்ந்து பாழடைந்து காணப்படுகிறது. மேலும், நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் இருந்து பிரியும் மடிச்சல் கிளை கால்வாய் உள்ளிட்டவற்றில்

பெரும்பாலான பகுதிகள் பல்வேறு உள்ளாட்சி நிர்வாகத்தாலும், அந்தந்தப் பகுதி பொதுமக்களாலும் மண் நிரப்பி சாலையாகவும் மாற்றப்பட்டுள்ளது.

கடந்த இரு மக்களவைத் தேர்தல்களிலும், இரு சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் நெய்யாறு இடதுகரைக் கால்வாய் பிரச்னை பல்வேறு கட்சியினரால் முன்வைக்கப்பட்டும், இதுவரை எந்தவித தீர்வும் எட்டப்படவில்லை. இதைத் தொடர்ந்து அண்மையில் நெய்யாறு இடகரைக் கால்வாய் பிரச்னையை தமிழக அரசு உச்சநீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றது.

இதனால் உச்சநீதிமன்றம் மூலம் நெய்யாறு இடதுகரைக் கால்வாய் பிரச்னைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இப்பகுதி மக்கள், விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நெய்யாறு இடதுகரைக் கால்வாய் துவங்கும் சுந்தரிமுக்கு பகுதியிலிருந்து சீரமைப்புப் பணிகள் மேற்கொள்வதுடன், கரையோரச் செடிகளையும் அகற்றும் பணியில் பொதுப்பணித் துறை ஈடுபட்டுள்ளது. இக் கால்வாய் சீரமைப்புப் பணிகள் முதல் கட்டமாக சுந்தரிமுக்கு பகுதி முதல் மேக்கோடு வரை சுமார் 1.5 கி.மீட்டர் தூரம் மேற்கொள்ளப்படுவதாகவும், இதற்காக ரூ.3.5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மேக்கோடு பகுதியில் பணி மேற்பார்வையில் ஈடுபட்டிருந்த பொதுப்பணித் துறை பணியாளர் ஒருவர் தெரிவித்தார். பிற பகுதிகள் விரைவில் சீரமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் எந்தக் கட்சியினராலும் கண்டுகொள்ளப்படாத நிலையில், இக் கால்வாயில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் முதல்கட்ட சீரமைப்புப் பணிகள், நெய்யாறு இடதுகரைக் கால்வாய் பிரச்னைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையையும், இப்பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு நீங்கி, விவசாயம் செழிக்கும் என்ற எண்ணத்தையும் இப்பகுதி மக்கள் மத்தியில் விதைத்துள்ளது.

## சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் வளர்ச்சிப் பணிகள் மே மாதத்தில் நிறைவடையும்?

**கன்னியாகுமரி,**

கன்னியாகுமரியை அடுத்த சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் ரூ. 78 கோடியே 50 லட்சம் செலவில் நடைபெற்று வரும் விரிவாக்கப் பணிகள், மே 20-ஆம் தேதிக்குள் முழுமைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குமரி மாவட்டத்தில் உள்ள ஒரே மீன்பிடித் துறைமுகம் சின்னமுட்டம் ஆகும். இதனை, தங்குதளமாகக் கொண்டு 275-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மூலம் மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொழில் செய்துவருகின்றனர். இங்கு பிடித்து வரப்படும் மீன்கள் வெளிமாவட்டங்களுக்கும், மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக இங்கு 25-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உள்ளன. இத்துறைமுகத்தில் படகுகளை நிறுத்த இடவசதி இல்லாத நிலையில் துறைமுகத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதையடுத்து, துறைமுக விரிவாக்கப் பணிகளுக்காக தமிழக அரசு ரூ. 78 கோடியே 50 லட்சம் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டது. இதற்கான பணிகள் கடந்த ஆகஸ்ட் மாதம் தொடங்கி நடைபெற்று வருகின்றன. தற்போது 80 சதவீத பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. மேற்கு அலை தடுப்புச் சுவர் பணிகள் 95 சதவீதம் நிறைவடைந்துள்ள நிலையில், தற்போது படகுத் தளத்தில் கான்கிரீட் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் துறைமுக வளாகத்தில் அணுகு சாலைகள் அமைக்கும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மீன்பிடித் தடைகாலம்: கிழக்கு கடற்கரைப் பகுதியில், மீன்பிடித் தடைகாலம் தொடங்க இன்னும் 14 நாள்கள் மட்டுமே உள்ள நிலையில் விரிவாக்கப் பணிகளை கருத்தில் கொண்டு, கடந்த 15 நாள்களுக்கும் முன்னரே மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லவில்லை. இதனால் சேதமடைந்துள்ள படகுகளை பழுது நீக்கும் பணியில் மீனவர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

விரிவாக்கப் பணிகள் குறித்து சின்னமுட்டத்தைச் சேர்ந்த மீனவர் ஜே. ஜோசப் கூறியதாவது:மீனவர்களின் கோரிக்கையினை ஏற்று, துறைமுக விரிவாக்கப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. பணிகள் நிறைவுபெறும் பட்சத்தில் விசைப்படகுகள் நேரடியாக கரைக்கு வந்து மீன்களை இறக்கிச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். மேலும் படகுதளத்தில் ஒருபடகு மற்றொரு படகுடன் மோதி

சேதமடைவதும் இனி தடுக்கப்படும். மே 20-ஆம் தேதிக்குள் பணிகள் நிறைவடையும் பட்சத்தில் மீனவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவர் என்றார் அவர்.

மே 20-இல் பணிகள் நிறைவு: துறைமுக விரிவாக்கம் குறித்து கடலரிப்பு தடுப்பு உபகோட்ட பிரிவு அதிகாரி ஒருவர் கூறியதாவது: இத்துறைமுகத்தில் தற்போது 300 விசைப்படகுகள் நிறுத்தும் வசதி உள்ளது. விரிவாக்கப் பணிகள் அனைத்தும் முழுமை பெறும் பட்சத்தில் மேலும் 300 படகுகள் வரை நிறுத்தும் வசதி கிடைக்கும். இதன் மூலம் மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும்.

கிழக்கு கடற்கரைப் பகுதியில் மீன்பிடித் தடைகாலம் ஏப். 15-ஆம் தேதி தொடங்கி மே 31-ஆம் தேதி வரையிலான 45 நாள்கள் அமலில் இருக்கும். ஜூன் 1-ம் தேதி மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் வகையில் மே 20-ம் தேதிக்குள் அனைத்து பணிகளும் நிறைவடைந்து விடும். எனவே தடைக்காலம் முடிந்து மீனவர்கள் புதுப்பொலிவுடன் தொழில் செய்ய முடியும்என்றார் அவர்.

**வெள்ளரி விலை திடீர் உயர்வு**

**ஆலங்குளம்,**

ஆலங்குளம் பகுதியில் வெள்ளரிக்காய்களின் விலை உயர்ந்துள்ளன. நிகழாண்டில் பருவமழை பொய்த்துப்போனதையடுத்து பெரும்பாலான விளை நிலங்கள் தரிசாகவே காணப்படுகின்றன. ஆலங்குளம் பகுதியில் வெள்ளரிக்காய் விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆலங்குளம் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சுந்தரபாண்டியபுரம் மற்றும் கீழப்பாவூர் பகுதிகளில் விளைவிக்கப்பட்ட வெள்ளரிக்காய்கள் விற்பனைக்கு வந்துள்ளன. இதனால் வெள்ளரிக்காய்களின் விலை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு 3 பிஞ்சு காய்களை 10 ரூபாய்க்கு விற்றனர். நிகழாண்டு ஒரு காய் ரூ.5 என விற்கப்படுகிறது.

இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது: கடந்த ஆண்டு வரை எடை போட்டு காய்களை வாங்கி வந்தோம். நிகழாண்டில் விளைச்சல் குறைந்ததால் தோப்பிலேயே எண்ணிக்கை அடிப்படையில்தான் வெள்ளரிக்காய்களை

எங்களுக்கு விற்கின்றனர் விவசாயிகள். எனவே விலையைக் குறைத்து விற்க இயலாத நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம் என்றார் அவர்.

## இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சிப் படிப்பு

புது தில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையம் மற்றும் அதனை சார்ந்த மையங்களின் கீழ் நடைபெறும் வேளாண் துறையின் பல்வேறு பிரிவுகளில் பி.எச்டி படிப்பிற்கான மாணவர் சேர்க்கைக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**தகுதி:**குறைந்தபட்சம் 60 சதவீத மதிப்பெண்கள் அல்லது முதுகலை பட்டப் படிப்பை முடித்திருக்க வேண்டும்.

எஸ்சி, எஸ்டி மற்றும் சிறப்பு பிரிவினர் 55 சதவீத மதிப்பெண்களை பெற்றிருக்க வேண்டும்.

இந்த வருடம் முதுகலை பட்டப் படிப்பு முடிக்க இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**தேர்ந்தெடுக்கப்படும் முறை:** நுழைவுத்தேர்வின் அடிப்படையில் தகுதியானவர்கள் படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்படுவர். நுழைவுத்தேர்வு ஜூன் 8ம் தேதி நடைபெற உள்ளது.

**விண்ணப்பிக்கும் முறை:** www.iari.rest.in என்ற இணையதளத்தின் வழியாக ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பித்தபின் கிடைக்கப்பெறும் ஆன்லைன் படிவத்தினை பிரிண்ட் அவுட் எடுத்து அனுப்ப வேண்டும். முழுவிபரங்களுக்கு இணையதளத்தைப் பார்க்கவும்.

ஆன்லைனின் விண்ணப்பிக்க ஏப்ரல் 9 கடைசி நாளாகும். ஆன்லைன் படிவம் சென்று சேர கடைசி நாள் ஏப்ரல் 16.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை: தமிழகத்தில் ஆங்காங்கே மழைக்கு வாய்ப்பு**

**சென்னை**: 'தென் தமிழகத்தை ஒட்டிய வங்கக்கடலில், காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதனால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஆங்காங்கே மழைக்கு வாய்ப்பு உள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வு நிலை: வங்கக்கடலில், ஒடிசா முதல் தென் தமிழகம் வரையிலான பகுதியில், நேற்று முன்தினம் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இது, அந்த இடத்திலேயே தொடர்ந்து நீடிக்கிறது.

இதனால், 'தமிழகத்தின் உள்பகுதிகள், புதுச்சேரி மாநிலம், கடலோர கேரளா உள்ளிட்ட பகுதிகளில், ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், காற்றழுத்த தாழ்வு நிலை அடுத்த, 48 மணி நேரத்திற்கு அதே இடத்தில் நீடிக்கும் என்பதால், மூன்று நாட்களுக்கு மழைநீடிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த, 24 மணி நேரத்தை பொறுத்தவரை, கர்நாடகத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டும், 1 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

திருத்தணியில் 105 டிகிரி வெப்பத்தை பொறுத்த வரை, தமிழகத்தில், அதிகபட்சமாக, திருத்தணியில், 41 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது. அடுத்த படியாக, சேலம், மதுரை, திருச்சி, திருப்பத்தூர் மற்றும் வேலூரில், 40; சென்னை, தர்மபுரி, பாளையங்கோட்டையில், 39 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது.

சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதிகள், காஞ்சிபுரம், திருவள்ளூர், திருப்பத்தூர், திருச்சி, சேலம், உள்ளிட்ட பகுதிகளில், காலை முதலே, அனல் காற்று வீசி வருகிறது. எனினும், மழைக்கான அறிகுறி தென்படுவதால், வெப்பம் சற்றே தணிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## நேரடி புழுதி நெல் விதைப்பு முறை




காலநிலை மாற்றம் மற்றும் உலகம் வெப்பமயமாதலின் காரணமாக பருவமழை பொய்த்து வருகின்றது. இதனால் அணைகள், கண்மாய்கள், ஏரி மற்றும் குளங்கள் நிறைவது மிகவும் கடினமாகி வருகிறது. நிலத்தடி நீரும் வற்றி விட்டது. இது போன்ற இக்கட்டான சூழ்நிலையில் நேரடி புழுதி நெல் விதைப்பு முறை சாகுபடி விவசாயிகளுக்கு மிகவும் உறுதுணையாக உள்ளது. துணிவே துணை என்று விவசாயிகள் முழு முயற்சியுடன் நேரடி புழுதி நெல் விதைப்பில் ஈடுபடலாம். **நேரடி புழுதி நெல் விதைப்பு:** பாசன நீர் சிக்கனமாவது மட்டுமல்ல. நேரடி நெல் விதைப்பில் நாற்றங்கால் தயாரிப்பு செலவும் மிச்சமாகின்றது. நாற்றுப் பறித்தல் மற்றும் நடவு செலவும் இல்லை. நாற்று விட்டு வைத்து விட்டு நடவிற்கு தக்க சமயத்தில் ஆள் கிடைக்கவில்லையே என்று யோசனை செய்ய வேண்டியது இல்லை. நேரடி விதைப்பிலும் இரண்டு முறைகள் உள்ளன.

1.புழுதி விதைத்த இறவை நெல் சாகுபடி முறை

2.சேற்றுழவு செய்து விதைப்பது

**புழுதி விதைத்த இறவை நெல் சாகுபடி:** இந்த நெல் சாகுபடி முறை விவசாயிகளிடையே மிகப்பெரிய அளவில் வரவேற்பினைப் பெற்று வருகின்றது. காவல்வாயில் பாசனநீர் வருவதற்கு தாமதமானாலோ அல்லது போதுமான அளவு மழை கிடைக்காத தருணத்திலோ புழுதி நெல் விதைப்பினை மேற்கொள்ளலாம். இதில் வயலை தண்ணீர் இல்லாமலே புழுதி வயலாக உழுது தயார் செய்து, நெல்லை நேரடியாக விதைத்து பிறகு வாய்க்காலில் பாசனநீர் கிடைத்தவுடன் சேற்று நெல்லாக மாற்றி பராமரிப்பு செய்ய வேண்டும். இப்படி செய்வதால் நடவு வயல் தயாரிக்க (சேற்றுழவு செய்ய) தேவைப்படும் பாசனநீர் மிச்சமாகிவிடும். கிணற்றுப் பாசனப் பகுதிகளில் பாசனநீர் பற்றாக்குறை இருந்தால் இந்த முறையைப் பின்பற்றி நெல் சாகுபடியை வெற்றிகரமாக மேற்கொள்ளலாம்.

**நேரடி புழுதி நெல் விதைப்பிற்கு ஏற்ற ரகங்கள்:** உயர் விளைச்சல் தரும் குறுகிய கால நெல் ரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 47 மற்றும் அம்பை (ஏஎஸ்டி) 16 ரகங்களை விவசாயிகள் தேர்ந்தெடுத்து சொர்ணவாரி பட்டமான ஏப்ரல் -மே மாதங்களில் சாகுபடி செய்து நல்ல மகசூல் எடுக்கலாம். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் அம்பை 16 மிக அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகின்றது. சொர்ணவாரி பட்டமானது போதுமான சூரிய வெளிச்சம், வெப்பம், நேர்த்தியான தண்ணீர் பராமரிப்பு, குறைவான பூச்சிகள் மற்றும் நோய்கள் ஆகிய காரணங்களினால் மற்ற பட்டத்தை விட இப்பட்டத்தில் அதிக மகசூல் எடுக்கலாம்.

**விதை நேர்த்தி செய்தல் :** புழுதி விதைப்பிற்கு ஒரு ஏக்கருக்கு முப்பது கிலோ விதை நெல் தேவைப்படும். விதையை நேர்த்தி செய்து விதைத்தால் முளைக்கும் பயிருக்கு வறட்சியைத் தாங்கும் சக்தி கிடைக்கும். இதற்கு முப்பது லிட்டர் தண்ணீரில் 300 கிராம் பொட்டாஷ் உரத்தைக் கரைத்து அதில் முப்பது கிலோ நெல் விதையை பதினாறு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு விதைகளை எடுத்து நிழலில் உலர்த்தி விதைப்பிற்கு பயன்படுத்தலாம்.

**விதைப்பு கருவி :** இவ்வாறு நேர்த்தி செய்த விதைகளை கையால் வீசி விதைப்பதை விட விதைப்புக் கருவி மூலம் விதைப்பது தான் நல்லது. நேரடி புழுதி விதைப்பில் விதைகள் ஒரு அங்குல ஆழத்தில் விதைக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் மேல் மண்ணில் கொஞ்சம் ஈரத்தன்மை குறைந்தாலும் முளைக்கும் பயிர் கொஞ்சம் சமாளித்து வளரும். தவிர விதைக்கும் கருவி மூலம் விதைத்தால் சரியான இடைவெளியில் விதைகள் விழும். இதனால் சரியான பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு நல்ல மகசூல் கிடைக்கும்.

**உரமிடுதல் :** நேரடி புழுதி நெல் விதைப்பிற்கு யூரியா, பொட்டாஷ் உரங்களை அடியுரமாக போட வேண்டியதில்லை. மேலுரமாகப் போட்டால் போதும். ஒவ்வொரு முறையும், ஒரு ஏக்கருக்கு 25 கிலோ யூரியாவும், எட்டு கிலோ பொட்டாஷும் இடலாம். குறுகிய கால நெல் ரகமாக இருந்தால் மேலுரத்தின் அளவினை கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம். இரும்புச்சத்து பற்றாக்குறை உள்ள இடங்களில் ஒரு ஏக்கருக்கு 20 கிலோ இரும்பு சல்பேட் நுண்ணூட்டத்தை இருபது கிலோ தொழு உரத்துடன் கலந்து இட்டு பயிர் வெளுப்பதை தடுக்கலாம்.

**களைக்கட்டுப்பாடு** : நேரடி நெல் விதைப்பினை பொருத்தவரை களை தான் பெரும் பிரச்னையாக இருக்கும். அதைத் தவிர்க்க கோடை உழவு பலமுறை செய்ய

வேண்டியது அவசியமாகிறது. தவிர கோடை உழவால் மண்ணின் ஈரமும் ஓரளவு அதிகரிக்கும். களைக்கட்டுப்பாடு என்பது நேரடி நெல் விதைப்பில் அவசியமானதாகும். ஆள் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் களைக்கொல்லிகளைப் பயன்படுத்தலாம். களைக்கொல்லி பயன்படுத்தும் போது வயலில் ஈரம் இருந்தால் களைகள் நல்ல முறையில் கட்டுப்படும்.

**பாசனம் :** விதை முளைத்து 4-5 வாரங்கள் கழித்து பாசனநீர் கிடைக்க ஆரம்பித்ததும் ஒவ்வொரு முறையும் ஐந்து சென்டி மீட்டர் அளவிற்கு மட்டும் பாசனம் செய்தால் போதும். அதற்குப் பிறகு சேற்று நெல் சாகுபடியாக எப்பொழுதும் பராமரிப்பது போலவே நெல் வயல்களைப் பராமரிக்கலாம். இப்படி எங்கெல்லாம் நெல் நடவுப்பருவத்தில் நீராதாரம் குறைவாக உள்ளதோ அங்கெல்லாம் விவசாயிகள் புழுதியில் நேரடி நெல் விதைப்பினை செய்து பாசனப் பற்றாக்குறையினை சமாளித்து சோதனைகளை சாதனைகளாக மாற்றி நெல் சாகுபடியினை தொடர்ந்து செய்து நல்ல மகசூல் எடுத்து பயன் அடையுங்கள்.

## சின்ன சின்ன செய்திகள்

**வீரிய ஒட்டு சிகப்புத் தீவனச் சோளம்:** ஸ்ரீகிருஷ்ணா சீட்ஸ் வழங்கும் "காமதேனு' 45 நாட்களுக்கு மேல் அறுத்து கால்நடைகளுக்கு வழங்கலாம். இந்த ஹைபிரீடு அதிவேகமாக வளரக்கூடியது.

கால்நடைகள் விரும்பிச் சாப்பிடும் பசுந்தீவனமாகவும் பதப்படுத்தப்பட்ட "சைலேஜ்' ஆகவும் பயன்படுத்தலாம். ஜூன் - ஜூலை பருவம் ஏற்றது. பிப்ரவரி - மார்ச், அக்டோபர் - நவம்பர் ஆகிய பருவங்களிலும் பயிரிடலாம். பொதுவாக நீர்வரத்தைப் பொறுத்து ஆண்டு தோறும் பயிரிடலாம். ஒரு ஏக்கருக்கு 12-15 கிலோ விதை தேவைப்படும். 2-2.5 செ.மீ ஆழத்தில் மேலாக நட வேண்டும். 3/4 அடிக்கு ஒருவிதை அளவில் கணக்குப்பண்ணி விதைக்க வேண்டும். முதல் உயிர் தண்ணீர் போக 10-15 நாட்களுக்கு 1 முறை பாசனம் தேவைப்படும். குப்பை உரம் 3-4 மெ.டன் போடவும். அடியுரமாக யூரியா 1 மூடை, சூப்பர்பாஸ்பேட் 2 மூடை, பொட்டாஷ் 1/2 மூடை லேசா தேவைப்படும் போது கொஞ்சம் யூரியா போடலாம். அல்லது 2 சதம் யூரியா கரைசலை ஸ்பிரே

செய்யலாம். கந்தகத்தை நேரடியாகவோ, ஜிங்க் சல்பேட் மூலமாகவோ வழங்குவது அவசியம்.

இந்த ஹைபிரீடு சோளத்தை 3,4 வெட்டுவரை பராமரிக்கலாம். முதல் வெட்டு 60-75 நாட்களில் பூக்கும் போது வரும் அதற்கடுத்து 30-35 நாட்கள் இடைவெளியில் அறுவடை கிடைக்கும். முதல் 45 நாட்களுக்கு முன் அறுவடை செய்தால், தீவனத்தட்டையில் HCN (எச்சிஎன்) இருக்கும் அதைத் தின்றால் மாட்டிற்கு மயக்கம் வரும். விளைச்சல் 40 டன் / ஏக்கர் (பசுந்தீவனம்) தீவனப்பயிர் வளரத் தோதான களர் அமில (PH) விலை 7.5 (Neutral & Soil). வரிசை நடவு தான் நல்லது. தீவனச்சோள விதைகளை ஸ்ரீகிருஷ்ணா சீட்ஸில் கிடைக்கும். மேலும் விபரங்களுக்கு ஸ்ரீகிருஷ்ணா சீட்ஸ், WCR ப்ளாட் நிர் 13அ, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், செல்லாயி அம்மன் கோவில் அருகில், துவாக்குடி, திருச்சி - 620 015. போன்: 75988 77573.

துல்லிய பண்ணைய நாற்றங்காலில் பயிர் பாதுகாப்பு: நிழல் வலைக் கூடாரத்தை சுற்றியுள்ள பகுதி - குழித்தட்டுக்களை வைக்கும் போது தரைமட்டத்தை விட சற்று உயர்வாக அடுக்குதல் வேண்டும். ஒவ்வொரு முறையும் அடுக்கும் போது அப் பகுதியை, பூசணக்கொல்லி அல்லது சோடியம் ஹைப்போ குளோரைடு கொண்டு நனைக்க வேண்டும். மக்கிய தென்னை நார்க்கழிவு குழித்தட்டுகளில் நாற்றுகளை வளர்க்க பயன்படுத்துவதால் நாற்றங்காலில் நோய் பாதிப்பைத் தவிர்க்க 300 கிலோ தென்னை நார்க்கழிவுடன் 2.5 கிலோ சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் கலந்து பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு பயிரின் நாற்றுகளையும் இரகம் வாரியாகவும் வயது வாரியாகவும் குழித்தட்டுக்கான கூடாரத்தில் வைக்க வேண்டும்.

பூச்சிகள் மேலாண்மை:

இலைப்பேன்: மிகச்சிறிய பூச்சியான இவை இளந்தளிரிலுள்ள சாறை உறிஞ்சுவதால் இலைகளில் பழுப்பு நிறக்கோடுகளுடன் எரிந்தது போன்று காணப்படும்.

அசுவினி: இளம் தளிர்கள், இளம் தண்டுகள், வளரும் மொட்டுப்பகுதிகளில் காணப்படும். இவற்றைத் தவிர வெள்ளை ஈ, மாவுப்பூச்சிகளும் பாதிப்பை ஏற்படுத்தும்.

வேப்ப எண்ணெய் 1 சதம் அல்லது புங்க எண்ணெய் 1 சதம் அல்லது 5 சதம் வேப்பங்கொட்டை கரைசலைப் பயன்படுத்துவதன் மூலம் பாதிப்பைக் குறைக்கலாம்.

டைமெத்தயோட் 2 மிலி (அ) ஆக்ஸிடெமட்டா மீதைல் 2 மிலி (அ) அசிட்டம்ரைடு 1 கிராம் / லிட்டர் (அ) தயோ குளோபிரிட் 1 மிலி / லிட்டர் (அ) தயோ மீத்தாக்சம் 0.5 கி / லிட்டர் இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிப் பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

செம்பேன்: சிகப்பு நிறத்தில் புள்ளி போல் காணப்படும். பாதிக்கப்பட்ட இளம் இலைகள், இளம் தண்டுகள் காய்ந்து உதிர்ந்து விடுகின்றன. இதற்கு காற்றோட்டம், மிதமான ஈரப்பதத்தை நிழல்வலைக் கூடாரத்தில் பேணுதல் வேண்டும். டைக்கோபால் 2 மிலி / லிட்டர் (அ) நனையும் கந்தகம் 3 கி / லிட்டர் (அ) பென் பிராக்சிமைட் 0.05 மிலி / லிட்டர் (அ) ஸ்பைரோமெஸிபேன் 0.07 மிலி / லிட்டர் இவற்றில் ஏதேனும் ஒன்றை தெளிக்க வேண்டும்.

நாற்று அழுகல் நோய்: நாற்றுகள் முளைத்தவுடன் தண்டுப்பகுதி மிருதுவாக இருக்கும் போது இதன் பாதிப்பு அதிகமாக இருக்கும். கேப் டான் 2 கி / லிட்டர் (அ) கார்பன்டாசிம் 1.5 கி / லிட்டர் (அ) குளோரோதயனில் 2 கி / லிட்டர் இவற்றால் ஏதேனும் ஒன்றை தெளிக்க வேண்டும். இதைத்தவிர பறவைக் கண்நோய் இலைக்கருகல்நோய்களும் தோன்றும். சூடோமோனால்ப்ளோரசன்ஸ் 4 கிராம் / லிட்டர் (அ) கார்பன்டாசிம் 1.5 கிராம் / லிட்டர் தெளிக்கலாம். (தகவல்: முனைவர் பா.ச.சண்முகம், முனைவர் க.இந்துமதி, முனைவர் நா.தமிழ்செல்வன், வேளாண்மை அறிவியல் நிலையம், பாப்பாரபட்டி, தருமபுரி மாவட்டம் -636 809. போன்: 04342 248 040).

- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

## காளான் வளர்ப்பு பயிற்சி



இயற்கை இவ்வுலகத்தைப் பல்வேறு வளங்களின் உறைவிடமாக உருவாக்கியிருக்கின்றது. இயற்கை தந்த வளத்தை நாம் பல்வேறு வகைகளில் பயன்படுத்திக் கொள்கிறோம். இவற்றில் காளான்கள் முக்கியமானவை. காளான்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சுவைமிக்க உணவாகக் கருதப்பட்டு வந்துள்ளன. காளான்களில் அடங்கியுள்ள மணம், சுவை, ஊட்டச்சத்து ஆகியவை எல்லோரையும் கவர்ந்திழுக்கும் இயல்பினை பெற்றிருக்கின்றன.

காளான்களின் சிறப்பம்சங்கள்:

* புரதச்சத்து நிறைந்தவை. * அமினோதிரவம் அடங்கியது. * மாவுச்சத்து குறைவாக (5.3 சதம்) உள்ளது. * கொழுப்புச்சத்து குறைவாக (0.36 சதம்) உள்ளது. * வைட்டமின் B, C, D உள்ளது. * இரத்தக்கொதிப்பு மற்றும் இருதயநோய்க்கு நல்லது. * நீரிழிவு நோயை கட்டுப்படுத்துகிறது. * எளிதில் ஜீரணிக்கக் கூடியது. * எத்தரப்பினரும் விரும்பி உண்ணும் வகையைச் சேர்ந்தது.

தமிழகத்தில் சமவெளிப் பகுதிகளில் சிப்பிக்காளான் இயற்கையிலேயே நிலவும் தட்பவெப்ப நிலையைப் பயன்படுத்தி வளர்ப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. பண்ணைக்கழிவுப் பொருட்கள் மற்றும் தொழிற்சாலை கழிவுப்பொருட்கள் போன்றவற்றை பயன்படுத்தி காளான்களை வளர்க்க முடியும். உணவுக் காளான்

உற்பத்தி ஒரு குடிசைத் தொழிலாகப் பெருகி வளர்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. விவசாயிகளுக்கு உபரி வருமானம் கிடைப்பதற்கு வாய்ப்பு. மேலும் சிப்பிக்காளான் வளர்ப்பில் பயிற்சி பெற விரும்புவோர் தங்கள் பெயர், முகவரியுடன் நேரிலோ, ரிப்ளை கார்டு தபால் மூலமாகவோ முன்பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சி கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூபாய் 250/- (ரூபாய் இருநூற்றி ஐம்பது மட்டும்) குறைந்தது 25 நபர்கள் முன்பதிவு செய்தவுடன் பயிற்சி தேதி முடிவு செய்யப்பட்டு தகவல் தெரிவிக்கப்படும். இவ்வாறு திருவில்லிபுத்தூர், பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப.அமலா பாலு தெரிவித்துக் கொள்கிறார்.

**இந்தியாவின் உணவு பாதுகாப்புக்கு ஆபத்து: சர்வதேச சுற்றுச்சூழல் அமைப்பு எச்சரிக்கை**



**புதுடில்லி** : 'புவி வெப்பமயமாவதால் ஏற்படும் பாதிப்பால், இந்தியாவின் உணவு பாதுகாப்பு திட்டத்துக்கு ஆபத்து ஏற்படும்' என, சர்வதேச சுற்றுச்சூழல் அமைப்பு எச்சரித்துள்ளது.

சுற்றுச்சூழல் மாசு

ஐ.பி.சி.சி., எனப்படும், நாடுகளுக்கு இடையோன சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பு குழு, ஜப்பானில் வெளியிட்டுள்ள அறிக்கை:காடுகள் அழிக்கப்படுவது, தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை, பிளாஸ்டிக் பயன்பாடு அதிகரிப்பு போன்ற பல காரணங்களால், சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. புவி வெப்பமயமாகி, பல பாதிப்புகள் ஏற்படத் துவங்கியுள்ளன, கரியமில வாயு

அதிக அளவில் வெளியேறுவதால், ஓசோன் படலத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.இதன் காரணமாக, சர்வதேச நாடுகளில், பல பாதிப்புகள் ஏற்படும். குறிப்பாக, இந்தியா, சீனா போன்ற நாடுகளில், உணவுப் பயிர் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்படும். இந்தியாவில், காற்றின், வெப்பத்தின் தன்மை அதிகரித்துள்ளது. பருவ மழை பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. அடிக்கடி புயல்கள் தாக்குகின்றன. கங்கை நதியிலும், நீரோட்டம் குறைவால், அங்கு அதிகமாக கிடைக்கும் மீன் வளம் குறையும்.

## விளைச்சல் குறையும்

இதுபோன்ற பிரச்னைகளால், விவசாயத்துக்கு கடுமையான பாதிப்பு ஏற்படுவதால், உணவு பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும். அதிகமாக பயன்படுத்தப்படும், கோதுமை, அரிசி ஆகியவற்றின் விளைச்சல் குறையும்.இவ்வாறு, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, 'இதுபோன்ற பிரச்னைகளை தடுக்க, போதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்' என, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அரசை வற்புறுத்திஉள்ளனர்.உலக நாடுகளில் நிலவும் பருவ நிலை மாற்றம், சுற்றுச்சூழல் மாசு போன்ற அறிவியல் பூர்வமான தகவல்களை தெரிவிக்கும் இந்த அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் செயல்படுகிறது; இது, 1988ல் ஏற்படுத்தப்பட்டது.இதன் தலைவராக, இந்தியரான, ராஜேந்திரா கே பச்சோரி உள்ளார்.

## மேட்டூர் அணையில் 3,000 கனஅடி நீர் திறப்பு

**மேட்டூர்**: வினாடிக்கு, 2,000 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை குடிநீர் தேவைக்கான நீர்திறப்பு நேற்று காலை முதல் வினாடிக்கு, 3,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் கோடை மழை பெய்ததால், 605 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து கடந்த, 27ம் தேதி வினாடிக்கு, 1,452 கனஅடியாக அதிகரித்தது. நேற்று நீர்வரத்து வினாடிக்கு, 1,018 கனஅடியாக சரிந்தது.

இந்நிலையில், பராமரிப்பு பணிக்காக திறக்கப்பட்ட கதவணை மின்நிலையங்களில் நீரை தேக்கவும், அதிகரித்துள்ள டெல்டா மாவட்டங்களுக்கான குடிநீர் பற்றாக்குறை போக்கவும் வினாடிக்கு, 2,000 கனஅடியாக இருந்த, மேட்டூர்

அணை நீர்திறப்பு, நேற்று காலை வினாடிக்கு, 3,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

நேற்று நீர்மட்டம், 48.240 அடியாகவும், நீர் இருப்பு, 16.722 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது. நீர்வரத்தை விட, நீர்திறப்பு அதிகரித்துள்ளதால் வரும் நாட்களில் மேட்டூர் அணை நீர்மட்டம் மளமளவென சரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## புளி தாராளம் மாங்கனி சந்தேகம்

**ஆர்.கே.பேட்டை**: நடப்பு ஆண்டில், புளி அதிகளவில் காய்த்துள்ளதால், மாங்கனி வரத்து குறையும் என, எதிர்பார்க்கப் படுகிறது. புளியம்பழம் அதிகம் விளையும் ஆண்டில், மாங்கனி விளைச்சல் குறையும் என்பது வழக்கமான ஒன்று. கடந்த ஆண்டு, மாங்கனி விளைச்சல் அதிகளவில் இருந்தது. பங்கனபள்ளி, மல்கோவா உள்ளிட்ட உயர் ரக மாம்பழங்கள் கிலோ 30 முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால், புளியம்பழம் (கொட்டை எடுக்காதது) கிலோ, 35 ரூபாய் என, விற்பனை செய்யப்பட்டது. புளியும், மாம்பழ விளைச்சலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. அதன்படி, இந்த ஆண்டு புளி அதிகளவில் விளைந்துள்ளது. கிலோ புளி (கொட்டை எடுக்காதது), 25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதிக விளைச்சல் காரணமாக, புளி விலை, கடந்த ஆண்டை விட, 10 ரூபாய் குறைந்துள்ளது. இதனால், மாம்பழம் விளைச்சல், கடந்த ஆண்டை விட குறைவாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு நிலவரப்படி, மாந்தோப்புகளில் மரங்களில் காய்கள் குறைந்த அளவே உள்ளன. எனவே மாம்பழம் விலை, இந்த ஆண்டு அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## வால்பாறை சீனி புளியங்காய்; ஈரோட்டில் விற்பனை ஜோர்

**ஈரோடு**: வால்பாறை, உடுமலை சுற்று பகுதியில் விளைந்த மருத்துவ குணம் நிறைந்த, சீனி புளியங்காய், ஈரோடு நகரில் தள்ளுவண்டிகளில் வைத்து விற்பனை செய்யப்படுகிறது.

ஈரோடு நகரில் நேதாஜி காய்கறி மார்க்கெட், பெரியார் நகர், ஈ.வி.என்., ரோடு, ஜங்ஷன் உள்ளிட்ட நகரின் மக்கள் அதிகம் கூடும் இடங்களில், தள்ளுவண்டிகளில் வைத்து, சீனி புளியங்காய் (கொடுக்காப்புளி) விற்பனை செய்கின்றனர்.

கிராமப்புறங்களில் மட்டும் கிடைக்கக்கூடிய, இவற்றை நகர் பகுதியில் வசிக்கும் மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

வியாபாரி ராஜன் கூறியதாவது:

ஆண்டுதோறும், மார்ச் மாதம் துவங்கி, மே மாதம் வரை இரண்டரை மாதங்கள், சீனி புளியங்காய் சீஸன் ஆகும். வால்பாறை, உடுமலை, தாராபுரம், குண்டடம், உப்பாறு சுற்று பகுதி, விவசாய நிலங்களின் வேலிகளில், சீனி புளியம் மரங்கள் உள்ளன. தற்போது சீஸன் துவங்கியதால், நேதாஜி மார்க்கெட்டுக்கு தினமும், 50 முதல், 80 மூட்டை விற்பனைக்கு வருகிறது.

மார்க்கெட்டில் வாங்கி, தள்ளுவண்டிகள் மூலம், நகரின் மக்கள் கூடும் இடங்கள், வீடுகளுக்கு நேரில் சென்று விற்பனை செய்கிறோம். அல்சர், ரத்த சுத்திக்காகவும், வைட்டமின் "சி' சத்து அதிகம் கொண்டதால், இவற்றை ஆர்வத்துடன் வாங்குகின்றனர்.

பழத்தில் கொட்டையை எடுத்து விட்டு சர்க்கரை, பொட்டுக்கடலை சேர்த்து, குழந்தைகளுக்கு கொடுக்கின்றனர். ஒரு கிலோ, 150 ரூபாய்க்கும், 250 கிராம், 40 ரூபாய்க்கும் விற்பனை செய்கிறோம், என்றார்.

### உற்பத்தி குறைவால் எகிறிய வாழை விலை

**கரூர்**: கடந்த இரண்டாண்டாக பருவ மழை தவறியதால், வாழைத்தார் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், வாழைத்தாருக்கு கூடுதல் விலை ஏற்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், லாலாப்பேட்டை மற்றும் குளித்தலை பகுதிகளில் அதிகளவில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. குறிப்பாக, காவிரி யாற்று பகுதிகளான திருக்காடுதுறை, நடையனூர், சேமங்கி, நொய்யல், மறவா பாளையம், தளவாபாளையம், ஆவராங்காட்டுர், தவுட்டுபாளையம், கட்டிபாளையம் மற்றும் பாலத்துரை பகுதிகளில் அதிகளவில் வாழை பயிரிடப்பட்டுள்ளது.

காவிரியாற்று பகுதிகளில் விளையும் வாழை ருசியாக உள்ளதால் ஈரோடு, திண் டுக்கல், மதுரை, திருச்சி, சேலம், நாமக்கல் மற்றும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. சித்திரை தொடங்கி ஆனி வரை மூன்று மாதங்களுக்கு திருமணம் உள்ளிட்ட சுப விஷேசங்கள் களைகட்டும். இதனால், கடந்த மாதத்தை விட வாழைத்தாருக்கு கூடுதல் விலை கிடைக்கிறது. கரூரில் கடந்த மாதம், 350

ரூபாய்க்கு விற்ற பூவன் தார், தற்போது 450 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி 300 ரூபாயில் இருந்து 350 ரூபாய்க்கும், ரஸ்தாளி 350 ரூபாயில் இருந்து 350 ரூபாய்க்கும், பச்சை நாடான் 250 ரூபாயில் இருந்து 300 ரூபாய்க்கும், மொந்தன் வாழை ஒரு காய் இரண்டு ரூபாயில் இருந்து நான்கு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. குறிப்பாக, கோடை வெயிலில் உடலுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தும் மொந்தன் வாழைக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

""வாழைத்தார் வரத்து குறைந்துள்ளதால், திருமணம் உள்ளிட்ட சுப விஷேசங் கள் துவங்கியுள்ளது. இதனால், வரும் வைகாசி மாதம் முதல் வாழைத்தார் விலை மேலும் உயரும்," என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## இஞ்சி, பீன்ஸ் விலை அதிகரிப்பு

**மதுரை** : கோடை துவங்கிய நிலையில், மதுரையில் இஞ்சி, பீன்ஸ் உட்பட சில காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது. காய்கறி வியாபாரிகள் சங்க தலைவர் பி.எஸ்.முருகன் கூறியதாவது: மதுரையில் கறிவேப்பிலை கிலோ ரூ. 20, கொத்தமல்லி 25, புதினா 7, இஞ்சி 105, பச்சைமிளகாய் 15, கருணைக்கிழங்கு 50, சேம்பு 40, சேனைக் கிழங்கு 18, பட்டர்பீன்ஸ் 60 முதல் 80, சோயாபீன்ஸ் 60 முதல் 70, கேரட் 16, பீன்ஸ் 45, கத்தரிக்காய் 15, பட்டாணி 50, வெண்டைக்காய் 20, காலிபிளவர் 10 முதல் 18, தக்காளி 9, பூசணிக்காய் 8, பல்லாரி 10 முதல் 12, சின்னவெங்காயம் 10 முதல் 15, பாகற்காய் பெரியது 20, சிறியது 30, உருளைக்கிழங்கு 18 முதல் 22, புடலங்காய் 12, அவரைக்காய் 35, முட்டை கோஸ் 6, முள்ளங்கி 10, பீர்க்கங்காய் 20, முருங்கைக்காய் 12, சுரைக்காய் 7, கீரை வகைகள் 10, தக்காளி 9க்கு விற்றது.கருணைக் கிழங்கு, பட்டர்பீன்ஸ், கிலோவுக்கு ரூ. 10 அதிகரித்துள்ளது. ரூ. 80 முதல் 90 வரை விற்ற இஞ்சி, கிலோவுக்கு ரூ. 15 வரை அதிகரித்துள்ளது, என்றார்.

## பயிறுக்கு உற்பத்தி நிறுவனம்; வேளாண்மைத் துறை முயற்சி

**திண்டுக்கல்** : விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, மாவட்டத்தில் மக்காச்சோளம், மலை வாழை, பூண்டிற்கு உற்பத்தி நிறுவனங்களை துவக்க வேளாண்மை துறை முடிவு செய்துள்ளது. மாவட்டங்களில் அதிகமாக

விளைவிக்கப்படும் பயிர்களின் எண்ணிக்கைக்கேற்ப உற்பத்தி நிறுவனங்களை துவக்கி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.திண்டுக்கல் மாவட்டத்தில் மக்காச்சோளம், காய்கறி, மா, திராட்சை, வெங்காயம், மலை வாழை, கொய்யா, முருங்கை, வெள்ளைபூண்டு அதிகமாக விளைவிக்கப்படுகிறது. இடையகோட்டையில் காய்கறிக்கும், பழைய ஆயக்குடியில் கொய்யாவிற்கும் நிறுவனங்கள் உள்ளன.இவற்றை தவிர்த்து, மக்காச்சோளம், மலை வாழை, பூண்டு உட்பட ஏழு வகையான பயிர்களுக்கு உற்பத்தி நிறுவனங்களை துவக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ள ப்பட்டுள்ளன. விவசாயிகளை ஒருங்கிணைக்கும் பணி, வேளாண்மை விற்பனை மற்றும் வணிக துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விளைச்சல் குறைவால் பூக்கள் விலை உயர்வு**



**போச்சம்பள்ளி**: திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகளின் காரணமாக பூக்களின் தேவை அதிகரித்து வருகிறது. ஆனால், கடும் வறட்சி மற்றும் வெயில் தாக்கம் காரணமாக பூக்கள் விளைச்சல் பாதிக்கப் பட்டுள்ளது. இதனால் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி சந்தையில் கடந்த வாரம் ரூ.30க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ செண்டுமல்லி நேற்று ரூ.80 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டது. இதேபோல்,ரூ.250க்கு விற்ற

முல்லை ரூ.400க்கும், ரூ.150 முதல் ரூ.200 வரை விற்ற கனகாம்பரம் ரூ.400க்கும் விற்கப்பட்டது.

**28ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.6.5 கோடிக்கு விற்பனை**



**ஆத்தூர்**: சேலம் மாவட்டம் ஆத்தூர் புதுப்பேட்டை பகுதியில் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கம் உள்ளது. இங்கு சேலம், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து பருத்தி மூட்டைகள் கொண்டுவரப்பட்டு ஏலம் விடப்பட்டன. நேற்று நடந்த 28ஆயிரம் மூட்டைகள் ரூ.6.5 கோடிக்கு விற்பனையாகின. விற்பனைக்கு வந்த பருத்தி மூட்டைகள் விலை விபரம் ஆர்சிஹெச் ரகம் ஒரு குவிண்டால் ரூ.4009 முதல் ரூ.5089 வரையிலும், டீசிஹெச் ரகம் ரூ.6009 முதல் ரூ.6989 வரையிலும் விற்பனையானது.

**யூரியா டன்னுக்கு ரூ.350 உயர்வு : தேர்தல் ஆணையம் ஒப்புதல்**



**புதுடெல்லி:** யூரியாவுக்கு உற்பத்தி செலவை ரூ.350 உயர்த்த உர அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இதற்கு தேர்தல் ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது. உற்பத்தி செலவு உயர்த்தியதன் மூலம் அரசுக்கு மானியமாக ரூ.900 கோடி கூடுதல் சுமை

ஏற்படும். உற்பத்தி செலவு உயர்த்தப்பட்டாலும் சந்தையில் விற்கப்படும் சில்லறை விலையில் மாற்றம் இருக்காது என மத்திய உரத்துறை அமைச்சர் ஸ்ரீகாந்த் ஜெனா தெரிவித்தார். இதன்படி, குறைந்தபட்ச உற்பத்தி செலவு ரூ.2,300 ஆக இருக்கும். இதனால் யூரியா விற்பனை விலையில் மாற்றம் இருக்காது என அமைச்சர் தெரிவித்தார்.

## வேர்க்கடலை கொள்முதல் விவசாயிகள் கோரிக்கை

**ஊத்துக்கோட்டை**, : ஊத்துக்கோட்டை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளான தாராட்சி, பாலவாக்கம், சூளைமேனி, தண்டலம், பெரியபாளையம், கன்னிகைபேர், போந்தவாக்கம், சீத்தஞ்சேரி உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் பெரும்பாலான விவசாயிகள் வேர்க்கடலை பயிர் செய்துள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் விதைத்து மார்ச், ஏப்ரல் மாதத்தில் அறுவடை செய்து விவசாயிகள் விற்பனை செய்கிறார்கள்.

இதுகுறித்து விசாயிகள் கூறுகையில், வேர்க்கடலை 3 மாத பயிர். இந்த ஆண்டு சரிவர மழை இல்லை. இதனால் ஒரு ஏக்கருக்கு 40 மூட்டை கிடைக்க வேண்டிய வேர்க்கடலை 30 முதல் 35 மூட்டைகள் மட்டுமே கிடைக்கிறது. மேலும் 40 கிலோ வேர்க்கடலை ரூ.1300க்கு தனியாருக்கு விற்கிறோம். அரசாங்கமே இந்த வேர்க்கடலையை கொள்முதல் செய்து ரூ.1400 வழங்க வேண்டும். மேலும் இந்த முறை மழை குறைவு என்பதால் வேர்க்கடலை விதைத்த விவசாயிகளுக்கு அரசு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றனர்.

## மரம் வளர்ப்பு பயிற்சி கருத்தரங்கம்

**செம்பனார்கோவில்**, : நாகை மாவட்டம், செம்பனார்கோவில் அருகே திருச்சம்பள்ளியில் உள்ள வனத்துறையில் வனவிரிவாக்கம் சார்பில் மரம் வளர்ப்பு மற்றும் கருத்தரங்கம் நடைபெற்றது.

நாகை மாவட்ட மரம் வளர்க்கும் விவசாயிகள் நலச் சங்க தலைவர் கணேசன் தலைமை தாங் கினார். தஞ்சை மாவட்ட வன விரிவாக்க அலுவலர் செல்வம் முன்னிலை வகித் தார். அலுவலக கண்காணிப்பாளர் செல்வராசு வரவேற்று பேசினார். முனைவர் டாக்டர். இளங் கோ கலந்துக் கொண்டு, விவசாயிகளுக்கு

மரம் வளர்ப்பு குறித்தும் அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் எடுத்துரைத்தார். தொடர்ந்து மரம் வளர்ப்பு மற்றும் உலக வன விழாவையொட்டி நடந்த போட்டியில் கலந்து பரிசுகளை வழங்கப்பட் டது. மரம் வளர்ப்பு பயிற்சியில் கலந்து கொண்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளிட்ட 200 பேருக்கு கையேடுகள், பேனா, பைகள், பயிற்சி சாதனங்கள் வழங்கப்பட்டது. இதில் தொழில்நுட்ப உதவியாளர் மணிவேலு, சித்தா கல்வி அறக்கட்டளை இயக்குனர் மகாகிருஷ்ணன் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பருப்பு வகைகள் ஏற்றுமதி மீதான தடை நீட்டிப்பு**



**மும்பை,**

மத்திய அரசு பருப்பு வகைகள் ஏற்றுமதி மீதான தடையை மேலும் நீட்டித்துள்ளது. எனினும் ‘காபுலி’ என்ற உயர்தர கொண்டைக்கடலை, இயற்கை விவசாய முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பருப்பு வகைகள் மற்றும் துவரம் பருப்பு (10 ஆயிரம் டன் வரை) ஏற்றுமதிக்கு தடையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் பருப்பு உற்பத்தி மற்றும் நுகர்வில் இந்தியா முதலிடத்தில் இருந்து வருகிறது. நம் நாட்டில் ஆண்டுக்கு 2.10 கோடி டன் பருப்பு

நுகரப்படுகிறது. அதே சமயம் உற்பத்தி ஏறக்குறைய 1.80 கோடி டன் அளவிற்கே உள்ளது. எனவே உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பருப்பு அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. பொதுவாக ஆஸ்திரேலியா, கனடா, மியான்மர் ஆகிய நாடுகளிலிருந்து பருப்பு இறக்குமதியாகிறது.

உள்நாட்டுத் தேவையைக் கருத்தில் கொண்டு 2006 ஜூன் மாதத்தில் முதல் முறையாக பருப்பு ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது. ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கும் பட்சத்தில் சப்ளை குறைந்து பருப்பு வகைகளின் விலை கடுமையாக உயர்ந்து விடும். எனவே பருப்பு ஏற்றுமதி மீதான தடை ஆண்டுதோறும் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகிறது.

**குன்னூர் ஏல மையத்தில் ரூ.1 கோடி மதிப்புள்ள தேயிலை தூள் விற்பனை**



**குன்னூர்,**

குன்னூர் ஏல மையத்தில் ரூ.1 கோடி மதிப்புள்ள தேயிலை தூள் விற்பனை செய்யப் பட்டு உள்ளது.

**<u>தேயிலை தூள் ஏல மையம்</u>**

தேயிலை ஏல மையத்தில் ரஷியா, பாகிஸ்தான் போன்ற தென்னிந்திய தேயிலை தூளை வாங்கும் ஏற்றுமதியாளர்கள் அதிகள வில் பங்குபெறாததால் ஏற்றுமதி குறைந்து உள்ளது. தேயிலை தூளுக்கு போட்டி இல்லாத காரணத்தால் வட இந்திய தேயிலை வர்த்தகர் களும் ஆர்வத்துடன் தேயிலை தூளை

வாங்குவதில்லை. இதன் காரணமாக தேயிலை தூளுக்கு விலை குறைவு ஏற்பட்டு வருகிறது.

<u>வார விலை</u>

குன்னூர் பகுதி தேயிலை தொழிற்சாலைகளில் கடந்த 29–ந் தேதி பச்சை தேயிலைக்கு வார விலையாக கிலோ ரூ.10 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்து உள்ள னர்.

கடந்த 27, 28 ஆகிய தேதி களில் நடைபெற்ற விற்பனை எண் 13–க்கான ஏலத்தில் கிலோவுக்கு ரூ.3 விலை வீழ்ச்சி ஏற்பட்டது .இந்த விலை வீழ்ச்சி பச்சை தேயிலையின் விலையையும் நேரடியாக பாதித்தது. இது குறித்து சர்வதேச மேலாண்மை யியல் ஆலோசகர் பி.எஸ்.சுந் தர் கூறியதாவது:–

கடந்த ஏலங்களில் தேயிலை தூள் தேக்கம் அடைவதோடு விலை குறைவும் ஏற்பட்டு வருகிறது. கடந்த சில வாரங் களில் 35 முதல் 40 சதவீத தேயிலைதூள் தேக்கம் அடைந்துள்ளது. இதன் மதிப்பு 3 முதல் 4½ கோடி ஆகும். ஏற்றுமதி இல்லாமை, வடஇந்திய வர்த்தகர்கள் பங்களிப்பு குறைவு போன்ற வற்றால் விலை குறைவு ஏற்பட்டு உள்ளது.

<u>சராசரி விலை</u>

விற்பனை எண் 13–க்கான ஏலத்தில் ஏல மையத்தில் ஒரு யுக்தி கடைபிடிக்கப்பட்டது. அதாவது விற்பனை விலையை குறைத்து தேயிலை தூள் விற்பனையின் அளவை அதி கரிக்க முடிவு செய்யப் பட்டது. இந்த ஏலத்தில் மொத்த தேயிலை தூள் அளவான 13 லட்சத்து 13 ஆயிரம் கிலோவில் 9 லட்சத்து 48 ஆயிரம் கிலோ விற்பனை ஆனது.

ஒரு கிலோவுக்கு சராசரி விலையாக ரூ.74.59 கிடைத்து உள்ளது. ஆனால் 12–வது ஏலத்தில் சராசரி விலை ஒரு கிலோவுக்கு ரூ.77.10 கிடைத்து உள்ளது. 13–வது ஏலத்தில் மொத்த விற்பனை 7.07 கோடி ரூபாய் மதிப்பில் உள்ளது. 12–வது ஏலத்தில் இதன் மதிப்பு ரூ.6.07 கோடி மதிப்பு ஆகும். விற்பனை ஆன தேயிலைக்கு விலை குறைத்ததால் ஒரே வாரத்தில் 1 கோடி ரூபாய் கிடைத்துள்ளது. இது 16½ சதவீத வளர்ச்சி ஆகும். 74.59 என்ற சராசரி விலை இந்த ஆண்டின் மிக குறைந்த

விலை ஆகும். கடந்த 2013 நவம்பர் முதல் இந்த குறைந்த விலை வரவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**விருத்தாசலம் பகுதியில் குறுவை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**



விருத்தாசலம் பகுதியில் குறுவை நெல் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர்.

<u>போக்கு காட்டிய மழை</u>

தமிழக விவசாயிகளை பொறுத்தவரையில் அக்டோபர் மாதம் தொடங்கும் வடகிழக்கு பருவ மழையையே அதிகளவில் சார்ந்து இருந்து வருகின்றனர். இவையே தமிழகத்திற்கு அதிகளவில் மழை கொடுக்க கூடிய ஆதாரமாகும். ஆனால் பருவநிலையில் ஏற்பட்ட மாற்றத்தால், இந்த ஆண்டு மழை போக்கு காட்டிவிட்டு சென்று விட்டது. இதன் எதிரொலியாக விருத்தாசலம் பகுதியில் தற்போது பல்வேறு நீர் நிலைகள், தடுப் பணைகள் என அனைத்தும் வறட்சியின் பிடியில் சிக்கி, தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது.

<u>குறுவை நெல் சாகுபடி</u>

பருவமழை இல்லாத போதிலும் சம்பா பயிரை குறைந்த அளவிலேயே விவசாயிகள் பயிர் செய்து, தற்போது அறுவடையையும் முடித்து விட்டனர். தற்போது கோடையை மிஞ்சிடும் வகையில் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. இருப்பினும் மனம் தளராத விருத்தாசலம் பகுதி விவசாயிகள் குறுவை சாகுபடி

செய்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதற்கென நாற்றங்கால் ஏற்படுத்தி, தற்போது நடவு பணிகள் அனைத்தும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. பொதுவாக குறுவை சாகுபடியினை பொறுத்தவரையில், மழையினை எதிர்பாராமல், கிணறுகளை நம்பியே விவசாயிகள் பயிர் செய்கின்றனர்.

வறண்டு போன ஆறு

இருப்பினும் விவசாயிகளின் நீர் ஆதாரமாக விளங்கும் மணிமுக்தாற்றில் கடந்த இரண்டு ஆண்டாக தண்ணீர் பெருக்கெடுத்து ஓடாததால், நிலத்தடி நீரும் அதளபாதாளத்திற்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து விவசாயி ஒருவரிடத்தில் கேட்டபோது, குறுவை சாகுபடிக்கென நாற்றங்கால் தயார் செய்து, தற்போது நாற்றுகள் பறிக்கும் பணி நடந்து வருகிறது. இதையடுத்து நடவு பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. 3 மாத பயிரான இதற்கு நிலத்தடி நீரை கொண்டே தண்ணீர் பாய்ச்ச வேண்டி இருக்கிறது. இதற்கென தடையின்றி மின்சாரம் இருந்திட வேண்டும். மேலும் தற்போதைய சூழ்நிலையில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படவும் வாய்ப்புள்ளது என அவர் தெரிவித்தார்.

**சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் ரூ.72 கோடி செலவில் விரிவாக்கப்பணிகள் கூடுதலாக 300 விசைப்படகுகளை நிறுத்தலாம்**



**கன்னியாகுமரி,**

சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் கூடுதலாக 300 விசைப்படகுகள் நிறுத்துவதற்கு வசதியாக ரூ.72 கோடி செலவில் விரிவாக்கப்பணிகள் நடந்து வருகிறது.

### மீன்பிடி துறைமுகம்

கன்னியாகுமரி அருகே உள்ள சின்னமுட்டத்தில் மீன்பிடி துறைமுகம் உள்ளது. இந்த துறைமுகத்தை தங்குதளமாக கொண்டு 350-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த விசைப்படகுகள் தினமும் காலை 5 மணிக்கு கடலுக்கு மீன்பிடிக்க சென்று விட்டு இரவு 9 மணிக்கு கரைக்கு திரும்புவது வழக்கம். இந்த நிலையில் இந்த துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக ஒரு படகின் மீது இன்னொரு படகை கட்டி நிறுத்தி வைக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டு உள்ளது. இதனால் கடுமையான கடல்சீற்றம் ஏற்படும் போதும், பயங்கர சூறாவளிக் காற்று வீசும் போதும் படகுகள் ஒன்றோடு ஒன்று மோதி சேதம் அடைகின்றன.

### ரூ.72 கோடி ஒதுக்கீடு

எனவே, கூடுதல் படகுகள் நிறுத்துவதற்கு வசதியாக இந்த துறைமுகத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று மீனவர்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து இருந்தனர். இந்த கோரிக்கையை ஏற்று தமிழக அரசு சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தை விரிவாக்கம் செய்ய ரூ.72 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. இதில் முதல்கட்டமாக சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தின் கிழக்கு பகுதியில் 1000 மீட்டர் நீளத்துக்கு அலை தடுப்புச்சுவரும், மேற்கு பகுதியில் 430 மீட்டர் நீளத்துக்கு அலை தடுப்புச்சுவரும் அமைக்கப்பட்டு உள்ளது. இதில் மேற்கு அலை தடுப்புச்சுவர் அமைக்கும் பணி 95 சதவீதம் நிறைவடைந்து உள்ளது.

### மேலும் 300 படகுகள் நிறுத்தலாம்

தற்போது சின்னமுட்டம் துறைமுகத்தில் சிமெண்ட் காங்கிரீட் தரைத்தளம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதன்மூலம் கூடுதலாக 300 விசைப்படகுகள் நிறுத்துவதற்கு வசதி செய்யப்பட்டு உள்ளது. இந்த பணிகள் அனைத்தும் மே மாத இறுதிக்குள் முடிக்கப்பட்டு விடும். இந்த பணிகளின் காரணமாக கடந்த ஒரு மாத காலமாக விசைப்படகுகள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லாமல் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

ஜூன் மாதம் 1-ந் தேதி முதல் மீன்பிடி தடைகாலம் முடிந்து விசைப்படகுகள் மீன்பிடிக்க செல்லும் போது துறைமுக விரிவாக்கப் பணிகள் அனைத்தும் முடிவடைந்து புத்தம் புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கும். இந்த பணிகளை சின்னமுட்டம் துறைமுக விரிவாக்கப்பணி செயற்பொறியாளர் மலையரசன், உதவி செயற்பொறியாளர் கங்காதரன், பொறியாளர் செந்தில்முருகன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**துறைமுகம்: மீனைப் படித்து வேலை வாங்கலாம்**




உலக அளவில் மீன் பிடித் தொழிலில் முன்னணி வகிக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. 910 கி.மீ. நீளத்திற்கு கடலோரப் பகுதியைக் கொண்ட தமிழ்நாடு மீன் பிடித் தொழிலின் முக்கியத் தளம்.

மீன் உற்பத்தியைப் பெருக்கிப் பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களை மேற் கொள்ளவும், வேலையற்ற இளைஞர்கள், மீனவ மகளிர் மற்றும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கவும், மீன்வளம் சார்ந்த பல்வேறு பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தவும் இன்று மீன் வளப் படிப்பு முக்கியத்துவம் பெற்று வருகிறது. இதற்காகவே நாகப்பட்டினத்தைத் தலைமை யிடமாகக் கொண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகமும் இயங்கி வருகிறது. இதன் கீழ் இயங்கி வரும் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் மீன் வளப் படிப்புகள்

வழங்கப்படுகின்றன. இளங்கலை, முதுநிலை, பி.ஹெச்.டி. ஆகிய படிப்புகள் வழங்கப்படுகின்றன.

ஆராய்ச்சிப் படிப்புகளாக மீன் வளர்ப்பு, மீன் வளர்ப்புப் பொருளாதாரம், மீன் பதப்படுத்தும் தொழில்நுட்பம், மீன் வள மேலாண்மை ஆகிய படிப்புகள் கற்றுத்தரப் படுகின்றன.. எம்.எப்.எஸ்சி., பிரிவில், மீன்வளர்ப்பு, நீர்வாழ் சுற்றுச்சூழல் மேலாண்மை, மீன் உயிரித் தொழில்நுட்பம், மீன் வளர்ப்புப் பொருளாதாரம், மீன்வளப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், மீன் பதப்படுத்தும் தொழில்நுட்பம், மீன்வள மேலாண்மை ஆகிய படிப்புகளும் வழங்கப்படு கின்றன. இவை தவிர பி.எஃப்.எஸ்.சி. பிரிவில் நான்காண்டு இளங்கலைப் படிப்புகளும் வழங்கப்படுகின்றன. பி.எஃப்.எஸ்.சி.யில் சேர பிளஸ் 2 தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமானது.

உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் இப்படிப்புக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ளன. இளங்கலை, முதுநிலை, ஆராய்ச்சி மாணவர் சேர்க்கைக்கான கல்வித் தகுதி, விண்ணப்பக் கட்டணம், விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பேடு ஆகியவற்றை http://www.tnfu.org.in/ என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலலாம்.